## 12th Tamil இயல் 1 - உயிரினும் ஓம்பப் படும்

## பாடம் 1 - இளந்தமிழே

1) "பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய் / பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்" - எனத் தனது "இளந்தமிழே" என்றக் கவிதையின்மூலம் தமிழ்த்தாயைப் போற்றியவர்?

A) வாணிதாசன் B) சுரதா C) சிற்பி பாலசுப்ரமணியம் D) மீரா

2) செந்தமிழ், செந்நிறம், செம்பருதி - இலக்கணக்குறிப்பு தருக.

A) வினைத்தொகைகள் B) பண்புத்தொகைகள்
C) வினையெச்சம் D) வேற்றுமைத்தொகை

3) சிவந்து - இலக்கணக்குறிப்பு தருக

A) பெயரெச்சம் B) வினையாலனையும் பெயர்
C) வினையெச்சம் D) பண்புத்தொகை

4) வியர்வைவெள்ளம் - இலக்கணக்குறிப்பு தருக

A) உவமைத் தொடர் B) உவமைத்தொகை C) உருவகம் D) உம்மைத்தொகை

5) முத்துமுத்தாய் - இலக்கணக்குறிப்பு தருக.

A) அடுக்குத்தொடர் B) இரட்டைக்கிளவி C) உவமைத்தொகை D) முற்றும்மை

Sub Qus 1) செம்பரிதி = செம்மை + பருதி - புணர்ச்சி விதி தருக:

ஈறுபோதல் (செம் + பரிதி = செம்பருதி)

Sub Qus 2) வானமெல்லாம் = வானம் + எல்லாம் - புணர்ச்சி விதி தருக:

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

Sub Qus 3) உன்னையல்லால் = உன்னை + அல்லால் - புணர்ச்சி விதி தருக

இஈஐ வழி யவ்வும் (உன்னை + ய் + அல்லால்) & உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (உன்னையல்லால்)

Sub Qus 4) செந்தமிழே = செம்மை + தமிழே - புணர்ச்சி விதி தருக

ஈறு போதல் (செம் + தமிழே) & முன்னின்ற மெய் திரிதல் (செந் + தமிழே = செந்தமிழே)

6) பின்வருவனவற்றுள் சிற்பி பாலசுப்ரமணியம் இயற்றிய நூல்?

A) ஊசிகள் B) ஊர்வலம்
C) நிலவுப்பூ D) இன்னொரு தேசியகீதம்

7) சிற்பி பாலசுப்ரமணியம் இயங்கிய தளம் அல்லாதது எது?

A) கவிஞர், மொழிபெயர்ப்பாளர்
B) பேராசிரியர், இதழாசிரியர்
C) சாகித்ய அகாதமியின் செயற்குழு உறுப்பினர்
D) தஞ்சை தமிழ் பலகலைக்கழக தமிழ்த்துறை தலைவர்

1)C 2)B 3)C 4)C 5)A 6)C 7)D

ETW ACADEMY

8) சிற்பி பாலசுப்ரமணியம், எப்பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக பனியாற்றினார்?

A) திருச்சி பாரதிதாசன் B) சேலம் பெரியார்
C) நெல்லை சுந்தரனார் D) கோவை பாரதியார்

9) இரண்டு முறை சாகித்ய அகாதமி விருது பெற்ற சிற்பி பாலசுப்ரமணியம் அவர்கள் தனது கவிதை நூல் அல்லாது வேறெதற்காகவும் சாகித்ய அகாதமி பெற்றார்?

A) மொழிபெயர்ப்பு B) கட்டுரைத் தொகுப்பு C) சிறுகதைத் தொகுப்பு D) புதினம்

10) சிற்பி பாலசுப்ரமணியத்திற்கு சாகித்ய அகாதமி விருது பெற்றுத்தந்த நூல்?

A) அப்பாவின் சிநேகிதர் B) மின்சாரப்பூ
C) சூடிய பூ சூடற்க D) ஒரு கிராமத்து நதி

11) சிற்பி பாலசுப்ரமணியம் அவர்களின் நூல்கள் வேறு எந்தெந்த மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன?

A) ஆங்கிலம், கன்னடம் B) மலையாளம், மராத்தி
C) ஆங்கிலம், இந்தி D) மேற்கண்ட அனைத்தும்

12) சிற்பி பாலசுப்ரமணியம் இயற்றிய கவிதை நூல்களில் சேராதது எது?

A) ஒளிப்பறவை B) சர்ப்பயாகம்
C) சூரிய நிழல் D) திருக்குறள் நீதி இலக்கியம்

13) சிற்பி பாலசுப்ரமணியத்தின் கவிதை நூல் எது?

A) பூஜ்யங்களின் சங்கிலி B) முதலில் இரவு வரும்
C) சிந்தாநதி D) வானம் வசப்படும்

14) சிற்பி பாலசுப்ரமணியத்தின் உரைநடை நூல் அல்லாதது?

A) இலக்கியச் சிந்தனைகள் B) இலக்கியச் சுவடுகள்
C) மலையாலக் கவிதை D) அலையும் சுவடும்

15) சிற்பி பாலசுப்ரமணியம், எம்மொழியிலிருந்து கவிதைகளையும் புதினங்களையும் மொழிபெயர்த்துள்ளார்?

A) மலையாளம் B) கன்னடம்
C) தெலுங்கு D) மேற்கண்ட அனைத்தும்

## பாடம் 2 - தமிழ்மொழியின் நடை அழகியல்

16) இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கணம் என தி.சு நடராசன் சுட்டும் இலக்கண நூல்?

A) அகத்தியம் B) தொல்காப்பியம் C) நன்னூல் D) தண்டியலங்காரம்

Sub Qus 5) எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாக கருதும் நூல் எது?

தொல்காப்பியம்

17) ஏனைய கலைகளிலிருந்து கவிதைக்கலையை வேறுபடுத்துகின்ற முதன்மையான, தனிச்சிறப்பான பண்பைப் பெற்றுள்ள மொழி எது?

A) தமிழ் B) வடமொழி C) கிரேக்கம் D) அனைத்தும்

8)D 9)A 10)D 11)D 12)D 13)A 14)B 15)A 16)B 17)A

ETW ACADEMY

18) மொழியின் இயல்பு வழக்குகளை கலையியல் வழக்குகளாக மாற்றுபவை?

A) உவமம், உருவகம்
B) எச்சம், குறிப்பு
C) உள்ளுறை, இறைச்சி
D) மேற்கண்ட அனைத்தும்

19) இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்து நிலைகள், கலை உருவாக்கத்தின்போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டிய நூல்?

A) வெண்பா பாட்டியல
B) நவநீதப் பாட்டியல்
C) வீரசோழியம்
D) தொல்காப்பியம்

20) பா வகைகள் ஆசிரியம் முதற்கொண்டு நான்கு எனச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து, "அந்நில மருங்கின் அறமுதலாகிய / மும்முதற் பொருட்கும் உரிய என்ப" என்று பாவகைகளோடு அறவியல் கருத்துக்களை இணைக்கும் நூற்பா இடம்பெறும் நூல்?

A) அகத்தியம், செய்யுளியல்
B) வீரசோழியம், செய்யுளியல்
C) தொல்காப்பியம், செய்யுளியல்
D) தண்டியலங்காரம், செய்யுளியல்

Sub Qus 6) நடைபெற்றியலும் என்ற சொற்றொடர் இடம்பெறும் தொல்காப்பிய இயல்?

கிளவியாக்கம்

Sub Qus 7) நடைநவின்றொழுகும் என்ற சொற்றொடர் இடம்பெறும் தொல்காப்பிய இயல்?

செய்யுளியல்

Sub Qus 8) "ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை / வெண்பா நடத்தே கலி" என்றப் பாடல் இடம்பெறும் தொல்காப்பிய இயல்?

செய்யுளியல்

21) எந்த தொன்மையான மொழியும் இதிலிருந்துதான் தொடங்குகிறது.

A) சமிக்ஞை, இசை
B) பேச்சு, எழுத்து
C) ஓவியம், பேச்சு
D) ஒலி, பேச்சு

22) "கடந்தடு தானை மூவிருங்கூடி / உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே; முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு; / முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்; / யாமும் பாரியும் உளமே; / குன்றும் உண்டுநீர் பாடினிர் செலின" என்னும் பாடலடிகள் இடம்பெற்ற நூல்?

A) தொல்காப்பியம்
B) பதிற்றுப்பத்து
C) புறநானூறு
D) மதுரைக்காஞ்சி

23) பறம்பு மலைக்குரிய தலைவன் யார்?

A) பேகன்
B) அதியமான்
C) வல்வில் ஓரி
D) பாரி

24) "படாம் ஈத்த கெடாஅ நல்லிசைக் / கடாஅ யானைக் கலிமான் பேக" - எனவரும் பாடல் இடம்பெறும் நூல்?

A) நற்றிணை
B) புறநானூறு
C) ஐங்குறுநூறு
D) கலித்தொகை

25) "புணரின் புணராது பொருளே; பொருள்வயின் / பிரியின் புணராது புணர்வே" - இப்பாடல் இடம்பெறும் சங்க நூல் எது?

A) நற்றிணை
B) புறநானூறு
C) ஐங்குறுநூறு
D) கலித்தொகை

18)D 19)D 20)C 21)A 22)C 23)D 24)B 25)A

ETW ACADEMY

**26)** "நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை" - என்று கூறும் நூல்?

A) குறுந்தொகை B) நெடுநல்வாடை C) புறநானூறு D) பட்டினப்பாலை

**27)** காளை இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கும் கலித்தொகைப் பகுதி?

A) குறிஞ்சிக்கலி B) முல்லைக்கலி C) மருதக்கலி D) பாலைக்கலி

**28)** "கிடை" என்னும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர் சொல்லி அழைப்பவர்?

A) ச. பாலமுருகன் B) இமையம் C) அழகிய பெரியவன் D) கி. ராஜநாராயணன்

**29)** "நீர்படு பசுங்கலம்" என்னும் வரிகள் இடம்பெற்ற இலக்கியம்?

A) நற்றிணை B) புறநானூறு C) ஐங்குறுநூறு D) கலித்தொகை

**30)** "இடுக வொன்றோ, சுடுகவொன்றோ; / படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே" என்ற புறப்பாடல் யாருடைய சாவுச்சடங்கு சர்ச்சைக்கு உள்ளானது பற்றிக் கூறுகிறது?

A) நம்பி நெடுஞ்செழியன் B) செங்குட்டுவன்

C) உக்கிரப்பெருவழுதி D) உதியன்சேரலாதன்

**31)** தி.சு. நடராசனின் நூல்களில் சேராதது எது?

A) தமிழ் அழகியல் B) திறனாய்வுக்கலை

C) கவிதையெனும் மொழி D) ஒரு சிறு இசை

- மேலும் ஒரு நூல்: தமிழின் பண்பாட்டு வெளிகள்

Sub Qus 9) _____ கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி.க.நடராசன் குறிப்பிடத்தக்கவர்

திறனாய்வுக்கலை

**32)** திறனாய்வாளராக பரவலாக அறியப்படும் தி.க.நடராசன், தமிழ்ப் பேராசிரியராக பணிபுரிந்த இடங்களில் சேராதது?

A) மதுரை காமராசர் பல்கலைக்கழகம் B) போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம்

C) சென்னைப் பல்கலைக்கழகம் D) நெல்லை மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

## பாடம் 3 - தன்னேர் இலாத தமிழ்

**33)** "ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி / ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள் / மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது / தன்னேர் இலாத தமிழ்" - எனும் பாடல் இடம்பெறும் நூல்?

A) நம்பியகப்பொருள் B) தண்டியலங்காரம்

C) நன்னூல் D) தொன்னூல் விளக்கம்

Sub Qus 10) "ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி / ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள் / மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது / தன்னேர் இலாத தமிழ்" பாடலின் பா வகை?

நேரிசை வெண்பா

**26)C 27)B 28)D 29)A 30)A 31)D 32)C 33)B**

ETW ACADEMY

**34)** "ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி / ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள் / மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது / தன்னேர் இலாத தமிழ்" - இப்பாடலில் பயின்று வரும் அணி?

A) பொருள் வேற்றுமை அணி
B) இல்பொருள் உவமை அணி
C) பின்வருநிலையணி
D) சொல் பின்வருநிலையணி

Sub Qus 11) இரு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது?

பொருள் வேற்றுமை அணி

**35)** உயர்ந்தோர் - இலக்கணக்குறிப்பு தருக.

A) பண்புத்தொகை
B) வினைத்தொகை
C) இடைக்குறை
D) வினையாலணையும் பெயர்

Sub Qus 12) வெங்கதிர் - இலக்கணக்குறிப்பு தருக:

பண்புத்தொகை

Sub Qus 13) இலாத - இலக்கணக்குறிப்பு தருக

இடைக்குறை

Sub Qus 14) ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள் - புணர்ச்சி விதி தருக:

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் & உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

Sub Qus 15) தனியாழி = தனி + ஆழி - புணர்ச்சி விதி தருக

இஈஐ வழி யவ்வும் (தனி + ய் + ஆழி) & உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

Sub Qus 16) வெங்கதிர் = வெம்மை + கதிர் - புணர்ச்சி விதி தருக:

ஈறுபோதல் (வெம் + கதிர்) & முன்னின்ற மெய் திரிதல் (வெங்கதிர்)

**36)** அணி இலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்களிலில் சேராதது?

A) தண்டியலங்காரம்
B) குவலையானந்தம்
C) மாறனலங்காரம்
D) முத்துவீரியம்

**37)** அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் எவை?

A) தொல்காப்பியம், வீரசோழியம்
B) இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம்
C) தொன்னூல் விளக்கம் & முத்துவீரியம்
D) மேற்கண்ட அனைத்தும்

**38)** "காவியதர்சம்" என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி தமிழில் எழுதப்பட்ட நூல்?

A) வீரசோழியம்
B) இலக்கண விளக்கம்
C) தொன்னூல் விளக்கம்
D) தண்டியலங்காரம்

**39)** தண்டியலங்காரம் இயற்றியவர்?

A) நம்பியாண்டார் நம்பி
B) தண்டி
C) அமிர்தசாகரர்
D) பவணந்தி முனிவர்

**40)** தண்டி எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்?

A) 10ம் நூற்றாண்டு
B) 11ம் நூற்றாண்டு
C) 12ம் நூற்றாண்டு
D) 13ம் நூற்றாண்டு

**34)A 35)D 36)D 37)D 38)D 39)B 40)C**

ETW ACADEMY

**41)** தண்டியலங்காரம் எத்தனைப் பிரிவுகளைக் கொண்டது?

A) மூன்று B) இரண்டு C) ஐந்து D) ஏழு

Sub Qus 17) தண்டியலங்காரத்தின் மூன்று பிரிவுகள்?

பொதுவியல், பொருளணியியல் & சொல்லணியியல்

பாடம் 4 - தம்பி நெல்லையப்பருக்கு

**42)** தம்பி நெல்லையப்பருக்கு என்று கடிதம் எழுதியவர்?

A) பாரதியார் B) மு. வரதராசனார் C) அறிஞர் அண்ணா D) மு. கருணாநிதி

**43)** எட்டையபுரம் மன்னர்கள் பரம்பரை பற்றி சாமி. தீட்சிதர் என்பவர் 1879இல் வெளிட்ட நூல் எது?

A) சித்தாந்த தீபிகை B) வம்சமணி தீபிகை C) எட்டையபுர தீபிகை D) சந்தான தீபிகை

**44)** பலவிதமான குற்றங்கள் இருந்த "வம்சமணி தீபிகை" என்றப் புத்தகத்தை நினிய தமிழ்நடையில் அமைத்துத் தருவேன் என வெங்கடேசுவர எட்டப்பருக்குக் கடிதம் எழுதியவர்?

A) சாமி தீட்சதர் B) இளசை மணி

C) பாரதியார் D) கடிகை முத்துப் புலவர்

**45)** "ஐயநின் அருளே அருங்கதி யென்ன" எனவரும் கடிதத்தை யார் யாருக்கு எழுதியது?

A) நெல்லையப்பருக்கு பாரதி எழுதியது B) பாரதிக்கு நெல்லையப்பர் எழுதியது

C) எட்டையபுர ஜமீனுக்கு பாரதி எழுதியது D) பாரதிக்கு எட்டையபுர ஜமீன் எழுதியது

**46)** வம்சமணி தீபிகை நூலின் மூல வடிவமானது மறுபதிப்பாக 2008இல் அப்படியே யாரால் வெளியிடப்பட்டது?

A) இளசை மணி B) புதுவை பூபாளம்

C) டி.எம்.கிருஷ்ணா D) பரலி சு. நெல்லையப்பர்

**47)** பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப்பாட்டு, முரசுப் பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர்?

A) பரலி சு. நெல்லையப்பர் B) இளசை மணி

C) பாரதிதாசன் D) கவிஞர் தமிழ்ஒளி

Sub Qus 18) பரலி சு.நெல்லையப்பர் இயங்கிய தளங்கள்?

விடுதலைப் போராட்ட வீரர், கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், பதிப்பாளர்

**48)** பாரதியார் நடத்திய எந்தெந்த இதழ்களில் பரலி. சு. நெல்லையப்பர் துணையாசிரியராகப் பணியாற்றினார்?

A) சுதேசமித்திரன், இந்தியா B) தர்மம், சக்கரவர்த்தினி

C) பாலபாரதா அல்லது யங் இண்டியா D) சூரியோதயம், கர்மயோகி

Sub Qus 19) பாரதியார் நடத்திய எந்தெந்த இதழ்களில் பரலி. சு. நெல்லையப்பர் முதலில் துணையாசிரியராகவும், பின்னர் ஆசிரியராகவும் பணியாற்றினார்?

லோகோபகாரி & தேசபக்தன்

**49)** பரலி நெல்லையப்பரின் கவிதை நூல்களில் சேராதது?

A) நெல்லைத்தென்றல் B) பிரதாப முதலியார் சரித்திரம்

C) உய்யும் வழி D) பாரதி வாழ்த்து

**41)A 42)A 43)B 44)C 45)C 46)A 47)A 48)D 49)B**

ETW ACADEMY

**50)** பரலி நெல்லையப்பர் யாருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார்?

A) வேங்கடகிருஷ்ண எட்டப்பர் B) பாரதியார்

C) வ.உ.சிதம்பரனார் D) சுப்ரமண்ய சிவா

Sub Qus 20) பாரதியார் நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் யார் பதிப்பித்த "பாரதி கடிதங்கள்" எனும் நூலில் இடம்பெற்றுள்ளது?

ரா.அ.பத்மநாபன்

Sub Qus 21) பாரதி தனது எவ்வயதில் கல்விகற்க உதவவேண்டி எட்டையபுர அரசருக்கு கடிதம் எழுதினார்?

15

Sub Qus 22) மறைவதற்கு முன்னால், பாரதி யாருக்குக் கடிதம் எழுதினார்?

குத்திகேசவர்

Sub Qus 23) பாரதியின் கடிதங்களில் உள்ள நடை?

பேச்சு நடை

Sub Qus 24) பாரதியை விட நெல்லையப்பர் எத்தனை ஆண்டுகள் இளையவர்?

7

## பாடம் 5 - தமிழாய் எழுதுவோம்

**51)** சரியான தொடர் எது?

A) முப்பத்திநான்கு B) நாப்பத்திமூன்று

C) நாற்பத்துமூன்று D) நாற்ப்பத்துமூன்று

**52)** உயிரெழுத்துக்களில் நெடில் எழுத்துகள் மற்றும் குறில் எழுத்துக்கள் முறையே எத்தனை?

A) ஏழு, ஐந்து B) ஆறு, ஆறு

C) ஐந்து, ஏழு D) மூன்று, ஒன்பது

**53)** உயிர்மெய் எழுத்துகள் 216இல், உயிர்மெய்க் குறில் மற்றும் உயிர்மெய் நெடில் எழுத்துக்கள் முறையே எத்தனை?

A) 110, 106 B) 100, 116 C) 80, 136 D) 90, 126

**54)** ந, ண, ன, ற, ர, ல, ள, ழ ஆகிய எட்டு எழுத்துக்களில் சொல்லின் தொடக்கமாக வரும் ஒரே எழுத்து?

A) ர B) ந C) ல D) ழ

Sub Qus 25) தமிழில் சொல்லின் தொடக்கமாக மெய்யெழுத்துகள் வருவதுண்டா?

இல்லை

Sub Qus 26) க்ரீடம், ப்ரியா ஆகியவை எம்மொழிச்சொற்கள்?

வடமொழி

**55)** **கூற்று:** பார்க், பன்ச், போத், டப் போன்றவை தமிழில்லை

**காரணம்:** வல்லின மெய்யோடு சொல் முடியாது. அப்படி முடிந்தால் அவை தமிழ்ச்சொல்லன்று

A) கூற்று சரி; காரணம் தவறு B) கூற்று தவறு; காரணம் சரி

C) கூற்று மற்றும் காரணம் சரி D) கூற்று மற்றும் காரணம் தவறு

**50)C 51)C 52)A 53)D 54)B 55)C**

ETW ACADEMY

**56)** தவறான வாக்கியம் எது?

A) வல்லின மெய்கள் ஈரொற்றாய் வாரா. ட், ற் என்னும் மெய்களைத் தொடர்ந்து மெய்கள் வருவதில்லை

B) க், ச், த், ப் ஆகியவற்றின்பின் அவற்றின் அவ்வெழுத்து வரிசைகளே வரும். பிற மெய்கள் வாரா

C) ட் , ற் என்னும் மெய்களுக்குப் பிறகு அவ்வெழுத்து வரிசைகளும் க, ச, ப என்னும் வரிசைகளுமே வரும்.

D) ட, ற என்னும் எழுத்துகள் சொல்லின் முதலில் வருவதுண்டு

விளக்கம்: ட, ற என்னும் எழுத்துகள் சொல்லின் முதலில் வாரா. டமாரம், றப்பர் - தமிழ் இல்லை.

**57)** ஆய்த எழுத்து பற்றிய பின்வரும் வாக்கியங்களில் எது சரி?

1. ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
2. தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்தும் வரும் (அஃது, எஃகு, கஃசு).

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 & 2 D) ஏதுமில்லை

**58)** பின்வரும் வாக்கியங்களில் எது சரி?

A) மெல்லின எழுத்துகளில் ண, ன சொல்லின் தொடக்கமாக வாரா

B) தனிச்சொல்லின் இடையில் வல்லினத்துக்கு முன் அவ்வல்லின மெய்யோ அவற்றின் இன மெல்லினமெய்யோ வரும். பிற மெய்கள் வருவதில்லை (தக்கை, தங்கை, பச்சை, இஞ்சி, பண்டு, பட்டம், பத்து, பந்து, தப்பு, பாம்பு, கற்று, கன்று).

C) ய், ர், ல், ழ், ள் என்னும் எழுத்துகளுக்குப் பின் வியங்கோள்வினைமுற்று / கள் விகுதி / வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும்போது இயல்பாய் நிற்கும்

D) தவறானது ஏதுமில்லை

Sub Qus 27) ணகர ஒற்றினை அடுத்து றகரமும் னகர ஒற்றினை அடுத்து டகரமும் வருமா?

வராது

**59)** எந்த எழுத்துகளில் முடியும் சொற்கள் அரிதாக உள்ளன?

A) க்,ங்,ச் B) ஞ்,ந்,வ் C) ம்,ம்,ய் D) ர்,ல்,ள்

Sub Qus 28) ஞ், ந், வ் ஆகிய எழுத்துக்களில் முடியும் சொற்களுக்கு எடுத்துக்காட்டு?

உரிஞ், வெரிந், தெவ்

Sub Qus 29) தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வருமா?

வராது

- தனிக்குறிலையடுத்து ரகர ஒற்று வரின் அதனைத் தமிழ் இயல்புக்கேற்பத் திருத்தி எழுதவேண்டும். (நிர்வாகம் - நிருவாகம்; கர்மம் - கருமம், கன்மம்)

Sub Qus 30) ரகரத்தை அடுத்து ரகர வரிசை எழுத்துகளும், ழகரத்தை அடுத்து ழகர வரிசை எழுத்துகளும் வருமா?

வராது

Sub Qus 31) உயிர் வரின் ஒரு, இரு ஆகிய சொற்கள் முறையே எவ்வாறு மாறும்?

ஓர், ஈர்

56)D 57)C 58)D 59)B

ETW ACADEMY

Sub Qus 32) உயிர் வரின் அது, இது, எது முறையே எவ்வாறு மாறும்?

அஃது, இஃது, எஃது

**60)** வேற்றுமைப்புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் எதுவாய் திரியும்?

A) டகரம் B) ணகரம் C) றகரம் D) ரகரம்

எ.கா: கல் + சிலை = கற்சிலை

**61)** லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் _____ஆகத் திரிவதுண்டு.

A) னகரம் B) டகரம் C) ணகரம் D) றகரம்

எ.கா: பல் + முகம் = பன்முகம்

**62)** ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ளகரம் _____ஆகத் திரிவதுண்டு.

A) னகரம் B) டகரம் C) ணகரம் D) றகரம்

எ.கா: மக்கள் + பேறு = மக்கட்பேறு

**63)** ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ____ஆகத் திரிவதுண்டு.

A) னகரம் B) டகரம் C) ணகரம் D) றகரம்

எ.கா: நாள் + மீன் = நாண்மீன்

Sub Qus 33) வருமொழி தகரமாயின் லகரம் றகரமாக மாறுவதோடு தகரமும் ____ ஆக மாறும்.

றகரமாக (சொல் + துணை = சொற்றுணை)

Sub Qus 34) வருமொழி நகரமாயின் லகரம் னகரமாக மாறுவதோடு நகரமும் ____ ஆக மாறும்.

னகரமாக (பல் + நூல் = பன்னூல்)

Sub Qus 35) தனிக்குறிலை அடுத்து லகரம் தகரம் வரும்போது ஆய்தமாக மாறும். தகரமும் _____ ஆகும்.

றகரமாகும் (அல் + திணை = அஃறிணை)

Sub Qus 36) இயக்குனர் / இயக்குநர் - இவற்றில் எது சரி?

இயக்குநர்

**64)** பின்வருவனவற்றுள் தவறான வார்த்தை எது?

A) உறுப்பினர் B) குழுவினர் C) ஊரினர் D) பெறுனர்

- பெறுநர் என்பதே சரி

Sub Qus 37) இயக்கு, ஓட்டு, அனுப்பு, பெறு முதலான வினைகள் பெயரிடைநிலையான ____ என்பதை பெற்றுவரும்

ந்

Sub Qus 38) உறுப்பு, குழு, ஊர் முதலானவை பெயற்சொற்களாதலால், அவை "இன்" என்னும் _____ ஐப் பெற்று உறுப்பினர், குழுவினர், ஊரினர் என்று முடிந்துள்ளன

சாரியை

**60)C 61)A 62)B 63)C 64)D**

65) ய,ர,ழ ஒற்றுகள் எவ்வாறு வரும்?

A) ஈரொற்றாய் வரும் B) அளபெடுத்தால் வரும்

C) மறைமுகமாக வரும் D) நேரடியாக வரும்

எ.கா: பாய்ச்சு, பார்க்கும், வாழ்க்கை

66) பிழையான தொடரைக் கண்டறிக.

A) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

B) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

C) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

D) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின.

67) பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

A) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்

B) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது

C) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது

D) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

68) இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்?

A) யாப்பருங்கலக்காரிகை B) தண்டியலங்காரம் C) தொல்காப்பியம் D) நன்னூல்

69) “மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு” கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,

1. பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

2. பொதிகையில் தோன்றியது

3. வள்ளல்களைத் தந்தது

A) 1 மட்டும் சரி B) 1 & 2 ஆகியவை சரி

C) 3 மட்டும் சரி D) 1 & 3 ஆகியவை சரி

70) "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்?

A) அடிமோனை, அடிஎதுகை B) சீர் மோனை, சீர் எதுகை

C) அடிஎதுகை, சீர் மோனை D) சீர் எதுகை, அடிமோனை

71) **கருத்து 1:** இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
**கருத்து 2:** தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது

A) கருத்து 1 சரி B) கருத்து 2 சரி

C) இரு கருத்துக்களும் சரி D) இரு கருத்துக்களும் தவறு

65)A 66)C 67)A 68)C 69)D 70)C 71)C

72) பொருத்துக.

அ) தமிழ் அழகியல் - 1) பரலி. சு. நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ - 2) தி.சு. நடராசன்

இ) கிடை - 3) சிற்பி பாலசுப்ரமணியம்

ஈ) உய்யும் வழி - 4) கி. ராஜநாராயணன்

A) 4, 3, 2, 1 B) 1, 4, 2, 3 C) 2, 4, 1, 3 D) 2, 3, 4, 1

73) மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு / மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா! - என்னும் கவிதை வரிகளை இயற்றியவர்?

A) சிற்பி பாலசுப்ரமணியம் B) ஈரோடு தமிழன்பன் C) அக்கினிபுத்திரன் D) ந. பிச்சமூர்த்தி

74) பழையன கழிதலும் புதியன புகுதலும் / வழுவல கால வகையி னானே - என்ற அடிகள் இடம்பெறும் நூல்?

A) தொல்காப்பியம் B) நன்னூல்

C) யாப்பெருங்கலக்காரியை D) தண்டியலங்காரம்

75) "வசனநடை கைவந்த வல்லாளர்" எனப் புகழப்படுபவர்?

A) வள்ளலார் B) ஆறுமுக நாவலர் C) வையாபுரிப்பிள்ளை D) உ.வே.சா

Sub Qus 39) 'அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி' என்று நீதிபதியிடம் ஆறுமுக நாவலர் கூறியதன் பொருள் என்ன?

சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர்க் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்டபோது

76) ஆறுமுக நாவலர் எங்கு பிறந்தார்?

A) யாழ்ப்பாணம் நாவாந்துறை B) யாழ்ப்பாணம் நீர்வேலி

C) யாழ்ப்பாணம் நல்லூர் D) யாழ்ப்பாணம் சுழிபுரம்

77) ஆறுமுகநாவலர் புலமை பெற்றிருந்த மும்மொழிகளில் சேராதது?

A) தமிழ் B) வடமொழி C) ஆங்கிலம் D) இந்தி

Sub Qus 40) ஆறுமுக நாவலர் இயங்கிய தளங்கள் எவை?

தமிழ்நூல் பதிப்பு, உரைநடை ஆக்கம், பாடசாலை நிறுவுதல், அச்சுக்கூடம் நிறுவுதல், கண்டன நூல்கள் படைத்தல், சைவ சமயச் சொற்பொழிவு

78) ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்களில் சேராதது?

A) திருக்குறள் பரிமேலழகர் உரை

B) சூடாமணி நிகண்டு

C) நன்னூல் - சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை

D) சீவக சிந்தாமணி

Sub Qus 41) ஆறுமுக நாவலரால் ஆக்கப்பட்ட நூல்கள் எவை?

இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாட நூல்கள்

72)D 73)A 74)B 75)B 76)C 77)D 78)D

ETW ACADEMY

Sub Qus 42) ஆறுமுக நாவலர் ____ நூல்களை வசனமாக எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவாக மாற்றினார்

புராண நூல்கள்

Sub Qus 43) ஆறுமுக நாவலர் எங்கு அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார்?

தமது இல்லத்தில்

**79)** ஆறுமுக நாவலருக்கு "நாவலர்" பட்டம் வழங்கியது எது?

A) திருவாவடுதுறை ஆதினம் B) தருமபுரம் ஆதினம்
C) மதுரை ஆதினம் D) திருப்பனந்தாள் ஆதினம்

**80)** விவிலியத்தை மொழிபெயர்க்க பெர்சிவல் பாதிரியாருக்கு உதவியவர்?

A) வள்ளலார் B) ஆறுமுக நாவலர் C) வையாபுரிப்பிள்ளை D) உ.வே.சா

**81)** முச்சங்கங் கூட்டி / முதுபுலவர் தமைக் கூட்டி / அச்சங்கத் துள்ளே / அளப்பரிய பொருள்கூட்டி / சொற்சங்க மாகச் / சுவைமிகுந்த கவிகூட்டி / அற்புதங்க ளெல்லாம் / அமைத்த பெருமாட்டி!- என்னும் பாடலை இயற்றிய கவிஞர்?

A) பாரதிதாசன் B) வாணிதாசன் C) கண்ணதாசன் D) காளிதாசன்

தமிழாக்கம் தருக: Learning is a treasure that will follow its owner everywhere

கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

தமிழாக்கம் தருக: A new language is a new life.

புதிய மொழி புதிய வாழ்க்கை.

தமிழாக்கம் தருக: If you want people to understand you, speak their language.

பிறர் உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் அவர் மொழியில் பேசு.

தமிழாக்கம் தருக: Knowledge of languages is the doorway to wisdom.

மொழிகளின் அறிவு ஞானத்தின் வழித்தடம்.

தமிழாக்கம் தருக: The limits of my language are the limits of my world.

என் மொழியின் எல்லை என் உலகத்தின் எல்லை.

**82)** மொழி வரலாறு என்ற நூலின் ஆசிரியர்?

A) மறைமலையடிகள் B) வ.சுப. மாணிக்கம்
C) இரா.பி. சேதுபிள்ளை D) மு. வரதராசனார்

**83)** நூல்களும் நூலாசிரியர்களும் இணைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொருந்தாதது எது?

A) இலக்கன உலகில் புதிய பார்வை - டாக்டர் பொற்கோ B) காட்டுவாத்து - ந. பிச்சமூர்த்தி
C) நெல்லூர் அரிசி - பிரமிள் D) சுவரொட்டிகள் - ந.முத்துசாமி

- நெல்லூர் அரிசி - அகிலன்

**79)A 80)B 81)C 82)D 83)C**

ETW ACADEMY

## கலைச்சொற்கள்

- Subscription – உறுப்பினர் கட்டணம்
- Fiction - புனைவு
- Biography - வாழ்க்கை வரலாறு
- Archive - காப்பகம்
- Manuscript - கையெழுத்துப் பிரதி
- Bibliography - நூல் நிரல்

ETW ACADEMY